செ.வெ.எண்.34 நாள்:19.10.2020

## நீலகிரி மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் வரும் 21.10.2020 அன்று சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நடைபெறவுள்ளது.

### மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் வரும் 21.10.2020 அன்று காலை 10.00 மணியளவில் உதகை சுஊவுஊ( பழங்குடியினர் பண்பாட்டு மையம்) கார்டன் சாலை, ஊட்டி, கீழ்தள கூட்ட அரங்கில் சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நடைபெறவுள்ளது. இதில் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை பெறாதவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. அதில் அடையாள அட்டை பெறாத மாற்றுத்திறனாளிகள் தங்களின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் நான்கு(4), குடும்ப அட்டை அசல் மற்றும் நகல், ஆதார் அட்டை அசல் மற்றும் நகலுடன் இந்த சிறப்பு முகாமில் கலந்து கொண்டு பயன் பெறலாம். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவர்களான மூடநீக்கியல் மருத்துவர், மனநல மருத்துவர், கண் மருத்துவர், காது மூக்கு தொண்டை நிபுணர், ரத்தவியல் மருத்துவர் மற்றும் நரம்பியல் மருத்துவர் ஆகியோர் கலந்து கொள்வதால் மாற்றுத்திறனாளிகள் மேற்படி முகாமில் கலந்து கொண்டு அடையாள அட்டை பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ..ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.